**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் ஆவணி 29–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 செப்டம்பர் 14– ஆம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசர கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் 0618/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2020–2021–ன் கீழ் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1622, நாள்.10.07.2020ன் படி நிர்வாக அனுமதி மற்றும் முழு மான்ய நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.(எம்.இ.2) எண். 303, நாள். 09.09.2020–ல் கீழ்க்கண்டவாறு சாலை பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>பணியின் விபரம்</u>**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 அய்யாச்சாமி நகர் காலணி கிழக்கு குறுக்கு வீதி மற்றும் மேற்கு 5வது வீதி, வார்டு எண் 9 திரு செந்தில் நகர் மெயின் வீதி வார்டு எண் 10 சக்தி நகர் 1,3 மற்றும் 5 மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் தார் சாலை அமைத்தல். | 100.00 |
| | **மொத்தம்** | **100.00** |

**<u>நிதி ஒதுக்கீடு விபரம்</u>**

| மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் நிதி (IUDM 2020–21 share) (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **100.00** | **80.00** | **20.00** |

எனவே, அரசாணையில் கண்ட நிதி ஒதுக்கீடு மற்றும் மதிப்பீட்டின்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1667 . நாள்.14.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண் 0667/2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் சிவன் நகரிலிருந்து தொட்டியபட்டி சாலை இணையும் இடத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +4.98 % அதிகம்

2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +6.20 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1668 . நாள்.14.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண் 0873/2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்மா உணவகத்தில் படிக்கட்டுகள் பராமரிப்பு பணி மற்றும் பங்களாபுதூர் ரோட்டில் குழாய் பாலம் சீரமைக்கும் பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட +4.85 % அதிகம்

2. ஆர். வடிவேல் மதிப்பீட்டை விட +6.30 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1669 . நாள்.14.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண் : 0945 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி பேருந்து நிலையத்தை புதுப்பிக்கும் பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட +4.46 % அதிகம்

2. ஆர். வடிவேல் மதிப்பீட்டை விட +6.29 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1670 . நாள்.14.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 0650 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட - 0.10 % குறைவு

2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 0.20 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட - 0.10 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1671 . நாள்.14.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 0708 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை ரோடு பகுதியிள்ள காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.1 மற்றும் கடை எண்.8 ஆகியவற்றின் மேற்கூரை பழுதினை சரிசெய்யும் பணி மற்றும் தாராபுரம் ரோடு பகுதியில் காவல் ஆய்வாளர் குடியிருப்பு முதல் ரவுண்டானா வரை வடிகால் அமைக்கும் பணி மற்றும் கோவை ரோடு இரண்டாவது தெருவில் வடிகால் பழுதுகள் சரி செய்யும் பணிக்காக 11.09.2020–ல்

நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட +4.80 % அதிகம்
2. ஆர். வடிவேல் மதிப்பீட்டை விட +5.25 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1672 . நாள்.14.09.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 0639 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் செம்மாங்காளி பாளையம் பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்யும் பணி மற்றும் ஏசி நகர் பகுதியில் பகிர்மானக் குழாய் அமைக்கும் பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட +4.95 % அதிகம்
2. ஆர். வடிவேல் மதிப்பீட்டை விட +5.60 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1673 . நாள்.14.09.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 0938 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.1.35 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் UPS பயன்பாட்டிற்கு பழுதடைந்த பேட்டரிகளுக்கு பதிலாக புதிய பேட்டரிகள் பொருத்தும் பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்பைடர் டெக்னாலஜி மதிப்பீட்டை விட -0.10 % குறைவு
2. டிஜி பிரிண்ட் சர்வீஸ் மதிப்பீட்டை விட +0.50 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட –0.10% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். ஸ்பைடர் டெக்னாலஜி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1674 . நாள்.14.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி

**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் புரட்டாசி 13–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 செப்டம்பர் 29– ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண் : 155/2015/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு குத்தகை காலம் முடிவுற்ற நிலையில் கடையின் குத்தகைதாரர்கள் கடையின் உரிமம் தேவையில்லை எனக் தெரிவித்ததின் அடிப்படையில் கீழ்கண்ட கடைகளை 23.09.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | ஏலம் விடப்பட வேண்டிய கடைகள் | கடை எண்கள் | ஏலம் முடிவடைந்த தேதி |
|---|---|---|---|
| 1. | நகரப் பேருந்து நிலையக் கடை எண் | 21 | 31.03.2020 |
| 2. | சென்னிமலை ரோடு நகரப் பேருந்து கடை எண் | 1 | 31.03.2020 |
| 3. | தாட்கோ வணிக வளாகக் கடை எண் | 2,3, 5,6 | 31.05.2017 |
| | | 4,8 மற்றும் 9 | 30.06.2020 |
| 4. | பழையப்பேருந்து நிலையக் கடை எண்கள் | 11,12,21,27,28 மற்றும் 31 | 30.06.2020 |
| | | 24,20A, | 31.07.2020 |
| 5. | தினசரி மார்க்கெட் வடக்குப் பார்த்த கடை எண் | 3,11,17 மற்றும் 18 | 31.03.2020 |
| 6. | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் | 6,14,15,17 மற்றும் 18 | 31.03.2020 |
| 7. | சென்னிமலை ரோடு பூக்கடை எண் | 1 மற்றும் 3 | 31.03.2020 |

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1675. நாள்.29.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**கோப்புஎண்.1159/2020/அ2**

உலகெங்கிலும் கொரோனா வைரஸ் (COVID-19) தொற்று நோய் கிருமி பரவல் இருந்ததை ஒட்டி தமிழக அரசின் உத்தரவின்படி 24.03.2020 முதல் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு

நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே, இக்காலத்தில் காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்கள் அனைத்தும் பூட்டப்பட்டது. தற்பொழுது இது குறித்து வரப்பெற்ற தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்:298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:02.09.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி அரசாணையின் படி COVID-19 தேசிய பேரிடர் காலத்தில் கடைகள் மற்றும் ஆண்டு குத்தகையினங்கள் யாவும் செயல்படாமல் இருந்ததை ஒட்டி இவற்றிற்கான வாடகை மற்றும் கட்டணங்கள் வசூலிப்பது குறித்து 01.04.2020 முதல் 31.05.2020 வரை அனைத்து குத்தகை இனங்களுக்கும் 2 மாத காலம் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் உள்ள ஆண்டு குத்தகை மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்கள் அனைத்திற்கும் 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான வாடகை மற்றும் குத்தகை தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
மேற்கண்ட அரசாணையின் அடிப்படையில் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1676 . நாள்.29.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண்.1140/2020/எச்1**

காங்கயம் நகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி பயன்படுத்தி வரும் மினி டிப்பர் லாரி, டம்பர் பிளேசர், டாடா ஏசி மற்றும் JCB வாகனங்களின் முன்பக்க மற்றும் பின்பக்க டயர்கள் தேய்ந்து வண்டியை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் பட்டியல்களில் கண்டுள்ளபடி வாகனங்களுக்கு புதிய டயர்கள் 33 எண்ணிக்கை புதிதாக மாற்றிடவும் மேலும் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண் 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரிடவும் மற்றும் மேற்படி புதிய டயர்களுக்கு தொகை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம்

| வ. எண் | வண்டி எண் | வாகன தன்மை | டயர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | TN 42 Y 8703 | மினி டிப்பர் லாரி | 7 |
| 2 | TN 42 V 3774 | டம்பர் பிளேசர் | 7 |
| 3 | TN 42 V 3771 | டம்பர் பிளேசர் | 7 |
| 4 | TN 42 AY 2675 | டாடா ஏசி | 5 |
| 5 | TN 42 T 8475 | டாடா ஏசி | 5 |
| 6 | TN 42 V 6706 | JCB | 2 |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண் 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரிடவும் தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1677 . நாள்.29.09.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண் : 0944/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டங்கள் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு சீரமைக்க வேண்டியுள்ளது. பொதுமக்கள் நலன்கருதி இப்பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே பழுதுகளை உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவதற்காக புகார் தெரிவிக்கும் பொருட்டு அலுவலகத்தில் அலைபேசி எண் ஒன்று உள்ளது. இதில் தெரிவிக்கும் புகார்கள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேற்படி புகார் தெரிவிக்க பயன்படும் அலைபேசி எண் பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவிக்கும் பொருட்டு சிறுமின்விசைபம்பு திட்டங்களின் பம்ப் ரும், தண்ணீர் தொட்டிகளில் சுமார் 100 இடங்களில் எழுதி விளம்பரம் செய்யலாம். இதற்கான உத்தேசமதிப்பீடு ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1678 . நாள்.29.09.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 0945 /2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் கீழ்க்காணும் விபரப்படி குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1) தாராபுரம் ரோடு அமராவதி நகர் பிரிவு அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் மின்மோட்டார் பழுதடைந்ததை அகற்றிவிட்டு புதியதாகப் பொறுத்துதல்.
2) புலிக்கல்மேடு பகுதியிலுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் cable மற்றும் குழாய்கள் பழுதடைந்துள்ளதை மாற்றி பொருத்துதல்.
3) 17 வார்டு நல்லதண்ணிர் கிணறு அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் UPUC பைப்புகள் புதியதாக மாற்றி பொருத்துதல்.
4) நெசவர்காலணி(2w) பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் மின்மோட்டார், கேபிள்கள் மாற்றி பொருத்துதல்.

5) உடையார்காலணியில் பழுதடைந்த குடிநீர்தொட்டிக்கு பதிலாக புதிய 5000 லிட்டர் PVC water tank பொருத்துதல்.

மேலும் குடிநீர் விநியோக தீதை சீரமைக்கும் பொருட்டு சில மாறுதல்கள் செய்து இணைப்பு வேலைகள் மேற்கொள்ள வேண்டியது.மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதியும் பணிகள் அவசர அவசியம் கருதியும் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/– ஆகும். அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1679 . நாள்.29.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 0938 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.1.35 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் UPS பயன்பாட்டிற்கு பழுதடைந்த பேட்டரிகளுக்கு பதிலாக புதிய பேட்டரிகள் பொருத்தும் பணிக்காக 11.09.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

3. ஸ்பைடர் டெக்னாலஜி — மதிப்பீட்டை விட -0.10 % குறைவு

4. டிஜி பிரிண்ட் சர்வீஸ் — மதிப்பீட்டை விட +0.50 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட –0.10% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். ஸ்பைடர் டெக்னாலஜி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1680 . நாள்.29.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 0943/2013/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பழையகோட்டை ரோடு பகுதியில் மூர்த்திரெட்டி பாளையம் செல்லும் பிரிவின் மேற்குப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு பகுதிகளில் கழிவுநீர் செல்ல வடிகால் வசதிகள் இல்லாததால் சாலையில் கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே, இதனை சரிசெய்ய வடிகால் அமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். மேற்படி பணி இப்பகுதி பொதுமக்கள் நலன் கருதி அவசியமானதாக உள்ளது. மேற்படி பணிக்கு

தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.10 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு இலட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1681 . நாள்.29.09.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**ந.க.எண்,481/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் கொரேனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் , தொழிற்சாலை பகுதிகள், பேரூந்து நிலையம், தினசரி மார்கெட், வாரச்சந்தை, அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள் அரசு மருத்துவமனை, மற்றும் தனியார் மருத்துவமனை அம்மா உணவகம், மின்மயானப்பகுதி பேரூந்து நிறுத்தும் இடங்கள், காங்கயம் பேரூந்து பணிமனை, வெளிநாடுகளில் இருந்து வந்து இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களின் குடியிருப்புகள், இந்நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்கள் ஆகிய மேற்காணும் அனைத்து பகுதிகளும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக லைசால் என்னும் கிருமி நாசினியை கொண்டு தொற்று நீக்கம் செய்திடவும், சோடியம் ஹைப்போகுளோரைடு தெளித்தல் பணி செய்தல் நகராட்சி தூய்மை பணியாளர்களும் அலுவலக பணியாளர்களுக்கும் ஒப்பந்த பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு உபகரணங்களான கையுறை, முககவசம், முழு உடல் கவச உடை, ஆகியவற்றை தேவையான அளவில் வாங்கிடவும், பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பு குறித்து நோட்டீஸ் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

மேலும் ஒவ்வொரு நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் அலுவலகத்தில் இருந்து வெளியில் சென்று வரும் போது ஒவ்வொரு முறையும் கிருமிநாசினியை கொண்டு கைகளை கழுவி சுத்தமாக வைத்து கொரோனா தொற்று ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை இருக்க தேவையான சேனிடைசர்கள், கைகழுவும் கிருமி நாசினிகள் வாங்கி பயன்படுத்துதல், நகரின் முக்கிய சாலை ஓரங்களில் அசுத்தமன நீர் நிலைகள் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் தொற்று நீக்கம் செய்ய தேவையான பிளிச்சீங்பவுடர், சுண்ணாம்புத்தூள், ஆகிய கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்தவும், நகராட்சியில் பணிபுரியும் அலுவலகப்பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், நிரந்தர பணியாளர்கள், கொசுபுழுஒழிப்பு பணியாளர்கள், குடிநீர் பணியாளர்கள் ஆகியோர் கொரோனா குறித்து ஊரடங்கு காலத்தில் அத்தியாவசிய பணி மேற்கொள்ள அடையாள அட்டைகள் வழங்குதல் போன்ற கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இதற்கு ஆகும் ரூ.10.00 இலட்சம் உத்தேச செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி எண் 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15 ன் படி பணியை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1682 . நாள்.29.09.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி